வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.02.2025 திங்கட்கிழமை இதழ் : 55 பக்கங்கள் : 12

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்: சங்கு சின்னத்தில் 9 கட்சிகள்!

## சந்திரகுமாரும் இணைவு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 24

**விரைவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபை களுக்கான தேர்தலில் ஒன்பது கட்சிகள் ஒன்றிணைந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் களமிறங்கவுள்ளன.**



தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.), ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ் தேசிய கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயக தமிழ் அரசு கட்சி, சமத்துவ கட்சி ஆகிய கட்சிகளே இவ்வாறு கூட்டாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்கொள்ள இணங்கியுள்ளன.

நேற்று ஞாயிற்றுக் கிழமை இணுவிலில் நடைபெற்ற குறித்த கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

நேற்றைய கலந்துரையாடலில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், 11

## ஏப்ரல் 26ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்?

கொழும்பு, பெப். 24

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 26ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட வலுவான வாய்ப்புள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக கின்றன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தல் குறித்து கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ. எல். ரத்நாயக்க, "இருப்பினும் அன்றைய தினம் தேர்தல் திகதி முடிவு செய்யப்படும் 11

## இலங்கை வருகிறார் இந்திய பிரதமர் மோடி!

புதுடில்லி, பெப். 24

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கை வருகிறார். இதன்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

இலங்கை வரும் இந்திய பிரதமர் சம்பூர் 11

## மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்!

### அமெரிக்காவின் விலகல் தமிழினத்துக்கு பின்னடைவு

ஜெனிவா, பெப். 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிறது. இன்று தொடங்கும் இந்தக் கூட்டத் தொடர் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி வரை நடைபெறும்.

இதில், எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பில் வாய்மூலமான புதுப்பிப்பு கேட்கப்படவுள்ளது.

இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் 11

## 50 கி. மீ. தூர கடற்கரையோரம் யாழில் தூய்மைப்படுத்தப்பட்டது!

யாழ்ப்பாணம், பெப். 24

தூய இலங்கை திட் டத்தின் கீழ் நேற்றைய தினம் யாழ்ப்பா ணத்தில் சுமார் 50 கிலோமீற்றர் கடற்கரை பகுதிகள் தூய்மைப்படுத்தப்பட்டன என்று யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

தூய இலங்கை திட்டத் தின் கீழ் "அழகான கடற் கரையின் பங்கு தாரராகுங்கள்" என்ற கருப்பொருளில் நேற்றைய 11



## விஜித ஹேரத் தலைமையிலான குழுவினர் ஜெனிவா பயணம்!

கொழும்பு, பெப். 24

ஐ. நா. மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான உயர்மட்ட குழு நேற்று ஜெனிவா பயணமானது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் இன்று முதல் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கவே இந்தக் குழுவினர் ஜெனிவா பயணமாகியுள்ளனர். 11



## பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கண்டி, பெப். 24

நாட்டின் பொதுப் பாதுகாப்புக்கு எந்தவோர் அச்சுறுத்தலும் இல்லை என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டி தலதா மாளி கக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அண்மைய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் குற்றவியல் குழுக்களுக்கு இடையிலான மோதல்களின் விளைவாகும். அவற்றை நிவர்த்தி 11

## மகன் ஏவிய அடியாள் குழுவால் தாக்கப்பட்ட தந்தை மரணம்!

வடமராட்சி, பெப். 24

குடும்பப் பிரச்னை காரணமாக மகன் ஏவிய அடியாள்கள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த தந்தை சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

வடமராட்சி கிழக்கு - வத்திராயனை சேர்ந்த சின்னத்துரை சிவபாலசுந்தரம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, 11

## மூன்றாம் கட்ட மீளாய்வு இணக்கம் வெள்ளியன்று

### சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, பெப். 24

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல் திட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வு குறித்து எட்டப்பட்ட பணியாளர் மட்ட இணக்கப்பாடு எதிர் வரும் வெள்ளிக்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) பணிப்பாளர் சபையால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. 11

## பி.பி.சி. புகழ் ஆனந்தி காலமானார்!

லண்டன், பெப். 24



பி. பி. சி. தமிழோசை புகழ் ஆனந்தி சூரியப்பிரகாசம் லண்டனில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலமானார்.

1980 -1990களில் தமிழ் மக்கள் மத்தியில் பி. பி. சி. தமிழோசை மூலம் அறியப்பட்ட இவர், 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டுவரை சுமார் 25 ஆண்டுகள் செய்தி வாசிப்பாளராக அறியப்பட்டவர்.

பி. பி. சி. தமிழோசையின் செய்தித் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச்சூழலை சுத்தமாகப் பேணும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்



கிளிநொச்சி, பெப். 24


**எமது சுற்றுச்சூழலை சுத்த மாக பேணுவோம் என ஒவ்வொரு தனிநபரும் முடிவெ டுத்து செயல்பட்டால் மாத் திரமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தூய்மையான இலங்கை என்பதன் இலக்கை அப்போதே முழுமையாக அடையமுடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

கிளீன் சிறீ லங்கா திட்டத் தின் கீழ் கௌதாரிமுனை கடற்கரை பகுதி நேற்று துப்புரவு செய்யப்பட்டது. இதில், பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அர சாங்கத்தின் தூரநோக்கில் ஒன்றுதான் தூய்மையான இலங்கை செயல்திட்டம். எங்கள் இடங்களை நாங்கள் துப்புரவாக வைத்திருக்க பழக வேண்டும். ஏதாவது ஒன்றை நாங்கள் பழக்கப்படுத்திவிட் டால் அதிலிருந்து மாறமாட் டோம். தவறான விடயத்துக்கு பழகிவிட்டால், நாங்கள் முன் னர் அப்படித்தான் செய்தோம் எனச் சொல்லி அந்தத் தவறான விடயத்தை தொடர்வதற்கே விரும்புகின்றோம். மாறுகின் றோம் இல்லை. நாங்கள் மாற வேண்டும். எங்களின் மாற்றம் தான் சூழலை அழகாக்கும்.

எமது பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான பொதுமலசல கூடங்கள் பயன்படுத்த முடி யாத நிலைமையில் இருக்கின் றன. இதற்கு நாம்தான் கார ணம். ஜப்பானில் சிறு வயதி லேயே அவர்களின் பாடசாலை மலசல கூடங்களை அந்தப் பிள்ளைகளைக் கொண்டே துப் பரவு செய்யப் பழக்குகின்றார் கள். அதனால்தான் அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் தமது சூழலை சுத்தமாக வைத்திருக்கிறார்கள்.

மாணவர்கள் மத்தியிலி ருந்து இதை நாம் வளர்த்தெ டுக்க வேண்டும். குப்பைகளை கண்ட இடங்களில் வீசாமல் குப்பைத் தொட்டிக்குள் போடுவதிலிருந்து சகல விட யங்களையும் பழக்கவேண்டும். அவர்களுக்கு இத்தகைய பழக்க வழக்கங்களை பழக்குவதன் மூலம் எதிர்காலத்தில் எமது சுற்றாடலை சுத்தமாக வைத்தி ருக்கலாம் - என்றார். (ஐ-02)



# கிளிநொச்சியில் 11 கடற்கரை பிரதேசங்கள் சுத்தமாக்கப்பட்டன!

கிளிநொச்சி, பெப். 24

கிளீன் சிறீ லங்கா திட்டத் தின் கீழ் நேற்றைய தினம் 11 கடற்கரை பிரதேசங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதான நிகழ்வு மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் தலை மையில் கௌதாரிமுனை கடற்கரை பிரதேசத்தில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் விருந் தினராக வடக்கு மாகாண ஆளு நர் நா. வேதநாயகன், கடற் றொழில் அமைச்சர் இ. சந்திர சேகர் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது, பிளாஸ்ரிக் கழிவுகள், மக்கி அழியக்கூடிய கழிவுகள் என வகைப்படுத்தப் பட்டு கடற்கரை பகுதி சுத்த மாக்கப்பட்டது.

அத்துடன், அரச திணைக் களங்களின் உத்தியோகத்தர் கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸ், முப்படையினர், ஆசி ரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்று துப்பரவு பணியில் ஈடுபட் டனர். (ஐ)

# கிளிநொச்சி - இரணைமாதா நகர் இடையே புதிய பேருந்து சேவை!

கிளிநொச்சி, பெப். 24

கிளிநொச்சியில் இருந்து முழங்காவில் இரணை மாதா நகர் வரை புதிய பேருந்து சேவை ஒன்று இன்று திங்கட் கிழமை முதல் இயக்கப்படவுள் ளது.

காலை 9.30 மணிக்கு கிளி நொச்சியிலிருந்து புறப்பட்டு அக்கராயன், முழங்காவில், நாச்சிக்குடா ஊடாக இராணை மாதா நகரை சென்றடையும்.

பின்னர், அதே பேருந்து மறுநாள் காலை 5.15 மணிக்கு வேளாங்கண்ணி வீதியில் இருந்து புறப்பட்டு காலை 8 மணியளவில் கிளிநொச்சி பேருந்து நிலையத்தை அடை யும் என்று கிளிநொச்சி சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட செயலரின் மகன் செலுத்திய வாகனம் விபத்து!

## வாகனத்திலிருந்த இருவர் காயம்



யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்ட செயலரின் மகன் செலுத்தினார் என்று கூறப்படும் வாகனம் வேகக் கட் டுப்பாட்டை இழந்து மரத் துடன் மோதியது. இதில், மாவட்ட செயலரின் மகனும் அவரின் நண்பரும் காயமடைந் தனர்.

பலாலி வீதியில் - யாழ்ப் பாணம் - கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்ததாகத் தெரியவருகின் றது.

விபத்தில் வாக னத்தில் பயணித்த இரு வரும் காயமடைந்த னர். சாரதி இருக்கை யில் இருந்தவரின் கால் வாகனத்தில் சிக்கிக் கொண்டதால் சுமார் ஒரு மணி நேர போராட்டத்தின் பின்னரே அவர் மீட்கப்பட்டார்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சக்கோட்டை கடற்கரை துப்புரவு செய்யப்பட்டது



வடமராட்சி, பெப். 24

கிளீன் சிறீ லங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சக்கோட்டை கடற்கரையை துப்புரவு செய் யும் பணி நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

மாவட்ட அளவில் நடை பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமை யில் முன்னெடுக்கப்பட்டது. யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் க. இளங் குமரன், யாழ்ப்பாண மாவட்ட படைகளின் கட்டளைத் தள பதி, பிரதி பொலிஸ்மா அதிபர், வட மாகாண கடற்படைகளின் பிரதித் தளபதி, பருத்தித்துறை பிரதேச செயலாளர் உள்ளிட் டோரும் பங்கேற்ற இந்த நிகழ் வில் சுமார் 2 கிலோமீற்றர் பிர தேசம் தூய்மைப்படுத்தப்பட் டது. (ஐ-02)

# இனவாதம், மதவாதம் ஊழலுக்கு எமது ஆட்சியில் முடிவு கட்டுவோம்


## அமைச்சர் சந்திரசேகர்

கிளிநொச்சி, பெப். 24

நாடு முழுமையாக சுத்தம் செய்யப்பட வேண்டும் என் றால் குப்பைகளை அப்புறப் படுத்தல் மாத்திரம் அல்ல. இன வாதம், மதவாதம், ஊழல், மோசடிகளுக்கும் முடிவு கட்ட வேண்டும் என்று கடற்றொ ழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரி வித்துள்ளார்.

நேற்றைய தினம் கிளி நொச்சி - கௌதாரிமுனை கடற்கரையை கிளீன் சிறீ லங்கா திட்டத்தின் கீழ் சுத்தப்படுத்திய நிகழ்வின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாங்கள் சூழலை சுத்தப் படுத்துவதைப் போல் எமது ஆட்சியின் கீழ் ஊழல்வாதிகள், மோசடியாளர்கள், கடத்தல் காரர்கள், கொலைகாரர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதிதேவதை மூலம் சுத்தம் செய் யப்படுவார்கள் - என்றார். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.02.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பாதுகாப்பு கேள்விக்குள்ளாகின்றதா?

அண்மையில், புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்ற படுகொலையைத் தொடர்ந்து ஒருவகையான பாதுகாப்பு கரிசனை எழுந்துள்ளது. பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாகவே குறித்த படுகொலை இடம்பெற்றிருந்தது. ஆனால், குறித்த கொலை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்றிருப்பதைக் கொண்டே பாதுகாப்பு கரிசனை எழுந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, மேலும் சில துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் கொலைகளும் இடம்பெற்றுள்ளன.

பாதாள உலகக் குழுக்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதும் ஒருவரை ஒருவர் இலக்கு வைத்து பழி தீர்ப்பதும் இலங்கையில் அவ்வப்போது இடம்பெறும் விடயம்தான். ஆனால், அச்சமற்ற சூழலொன்றை ஏற்படுத்தப் போவதாகக் கூறிவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் காலத்தில் இவ்வாறான கொலைகள் இடம்பெறுவதால் இதனை ஒரு பிரதான பேசுபொருளாக எதிரணியினர் முன்வைத்து வருகின்றனர்.

ஒருவகையில் இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சவாலாகவே மாறியிருக்கின்றது. ஏனெனில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தனது பாதுகாப்பு தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்தவில்லை. அத்துடன், ஜனாதிபதிக்கான பாதுகாப்பை குறைத்திருப்பதையும் ஒரு முன்னுதாரணமான விடயமாகவே அவர் முன்வைத்திருந்தார். ஜனாதிபதியே தனது வாகனத்தின் கதவைத் திறந்து இறங்கிவரும் காட்சிகள் மக்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றிருந்தன. ஆனால், இலங்கை போன்ற நாடுகளில் பாதுகாப்பு விடயங்களில் கரிசனையற்றிருப்பது உசிதமான விடயமா என்னும் கேள்வியையே மேற்படி சம்பவங்கள் எழுப்பியிருக்கின்றன.

இலங்கை நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தத்துக்குள் சிக்கியிருந்த ஒரு நாடு. அந்த வகையில் இலங்கையின் அரசியலில் துப்பாக்கிக் கலாசாரம் புரையோடிப் போயிருந்தது. அரசியலில் தங்களின் எதிரிகளை அகற்றுவதற்கு துப்பாக்கிகளை பயன்படுத்தும் கலாசாரமானது நீண்டகாலமாக ஓர் அச்சுறுத்தும் காரணியாக இருந்திருக்கின்றது.

ஆனால், யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து அவ்வாறான நிலைமை படிப்படியாக குறைவடைந்தது. இப்போது அரசியல்வாதிகள் அச்சப்படுமளவுக்கான நிலைமை இல்லை. எனினும், அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தென்னிலங்கையில் பாதாள உலகக் குழுக்கள் பலமான நிலையில் இருக்கின்றன என்பதையே காண்பிக்கின்றன. அவர்களைப் பயன்படுத்தி பல விடயங்களை மேற்கொள்ளக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. நீதிமன்ற வளாகத்துக்குள் இடம்பெற்ற படுகொலை அதற்கான எடுத்துக்காட்டாக இருக்கின்றது. இதற்கு முன்னரும், நீதிபதியையே பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் சுட்டுக் கொலை செய்த சம்பவமும் இருக்கின்றதுதான். ஆனால், இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய பிறிதொரு விடயம் உண்டு. அதாவது, நல்லாட்சி அரசாங்கமாகக் காண்பிக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில்தான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அதுவே பின்னர் ரணில் - மைத்திரி ஆட்சியை மாற்றுவதற்கான பிரதான காரணியாக மாறியது.

நாட்டில் பாதுகாப்பு பலவீனமாக இருக்கிறது என்னும் காரணத்தைக் காண்பித்தே கோட்டாபய அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தார். கோட்டாபயவால் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாது என்னும் நிலையில்தான் மீண்டுமோர் ஆட்சி மாற்றத்துக்கான காரணம் உருவாகியது. இந்த நிலையில் அநுர அரசாங்கத்தில் இது போன்ற விடயங்கள் தொடருமாக இருந்தால், நாட்டில் மீண்டும் பாதுகாப்பற்ற சூழலொன்று ஏற்பட்டுவிட்டதான அரசியல் தோற்றப்பாடே உருவாகும். அது இறுதியில் அரசாங்கத்தின் வீழ்ச்சியாகவும் மாறலாம்.

## ரயில்மீது கல் வீசிய 3 சிறுவர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 24

ரயில்மீது தொடர்ச்சியாக கல் வீசித் தாக்கிய 3 சிறுவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் நோக்கி வந்தபோது அரியாலை பகுதியில் வைத்து இவர்கள் கல் வீச்சு நடத்தியுள்ளனர்.

இதனை, ரயிலில் பயணித்த ஒருவர் தனது கைபேசியில் காணொலியாக பதிவு செய்திருந்தார். இந்தக் காணொலியை ஆதாரமாக வைத்து 3 சிறுவர்களும் கைதுசெய்யப்பட்டனர். யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

கைதான சிறுவர்கள் மூவரும் 13 - 15 வயதுக்கு உட்பட்டவர்களாவர். இவர்கள் மீது ஏற்கனவே சிறு குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளன.

கைதான சிறுவர்களை அவர்களின் பெற்றோரின் உதவியுடன் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முன்னதாக, ரயில்மீது நடத்தப்பட்ட கல் வீச்சில் பயணி ஒருவர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியா பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கைநெறி ஆரம்பம்

வவுனியா, பெப். 24

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஊடகம் மற்றும் இதழியல் கல்வி உயர்தர சான்றிதழ் கற்கை நெறியின் இரண்டாவது அணிக்கான கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வவுனியா பல்கலைக்கழகம் பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் கடந்த 2023ஆம் ஆண்டு ஊடகம் மற்றும் இதழியல் கல்வி உயர்தர சான்றிதழ் கற்கை நெறியின் முதலாவது அணி கற்கை நெறியை ஆரம்பித்து நிறைவு செய்திருந்தது.

இதன் தொடர்ச்சியாக ஊடகம் மற்றும் இதழியல் கல்வி உயர்தர சான்றிதழ் கற்கை நெறியின் இரண்டாவது அணிக்கான கற்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த கற்கை நெறியின் ஒருங்கிணைப்பாளர் திருமதி மதிவதனி சசிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கற்கைநெறி ஆரம்ப நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா, ஊடகவியலாளர் அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. நிக்சன், மற்றும் ஊடகவியலாளர்களான ந.கபில்நாத், நபீஸ் சகவாழ்வு நிலைய பணிப்பாளர் யூட் லியோன் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-10)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

அம்பாறை, பெப். 24

தனியார் பண்ணை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் அம்பாறை - தெஹியத்தகண்டி - முவபெட்டி கேவல, ஹூலங்பந்தனா கலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில், வீரகெட்டியவை சேர்ந்த 35 வயது நபரே உயிரிழந்தார்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது வழியிலேயே உயிரிழந்தார்.

இது தொடர்பாக தெஹியத்தகண்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வல்லை கடல்நீரேரி கரையோரம் நேற்று தூய்மைப்படுத்தப்பட்டது



வடமராட்சி, பெப். 24

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலகம் மற்றும் பிரதேச அமைப்புகள் இணைந்து வல்லை கடல் நீரேரியின் கரையோரத்தை நேற்று சுத்தப் படுத்தின.

கரவெட்டி பிரதேச செயலர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வல்லைப்பாலம் தொடக்கம் வல்லை உப்பு வீதிசந்தி வரையான மூன்று கிலோ மீற்றர் பகுதி இதன்போது துப்பரவு செய்யப்பட்டது. (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி -24 திங்கக்கிழமை
குரோதி வருடம் - மாசி 12
நல்ல நேரம்:6.00-7.30
ராகு காலம்:7.30 -9.00
திதி :துவாதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின்உணர்வுகளுக்குமதிப்பளிப்பீர்கள். சிலரின் உதவியை நாடுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதித்துக் காட்டும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். தொழில் லாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விமர்சகர்கள் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**கடகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும்.

**சிம்மம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பணவரவு திருப்தி தரும்.

**கன்னி**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. பிள்ளைகளின் வருங்காலதிட்டத்தில் ஒன்று நிறைவேறும்.

**துலாம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில புது அனுபவம் உண்டாகும். புதுவேலைக் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். உடல் நலம் சீராகும். சொத்து பிரச்னை ஒன்று தீரும்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. கடனாககொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வாகனத்தில் கவனம் தேவை.

**மீனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின்விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள்வரும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

# சட்டவிரோதிகளின் ஆட்சியே வடக்கு கடலில் நடக்கிறது!

## ரவிகரன் எம். பி. ஒத்திவைப்பு பிரேரணை

கொழும்பு, பெப்.24

"சட்டவிரோதிகளின் ஆட்சியே வடக்கு கடலில் நடக்கிறது. அமைச்சரே உங்களுடைய ஆட்சி வடக்கு கடலிலே இல்லை"- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வடபகுதிக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயல்பாடுகளைத் தடுத்து, மீனவ மக்களை நிம்மதியாக வாழவிடுங்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "கடற்றொழிலில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை சட்டவிரோதிகள் செய்து வருவதால் உண்மையான மீனவர்கள், மீனவக் குடும்பங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.

அரசாங்கம் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத தொழில்களை உடனடியாக நிறுத்தி மக்களின் வாழ்வா தாரத்துக்கு உதவ வேண்டும்.

வடக்கு கடல் இப்போது சட்டவிரோதிகளின் ஆளுகையின் கீழ் காணப்படுகின்றது.

சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், டைனமற், வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத தொழில்களால் வடக்கு கடல் நிரம்பியுள்ளது.


சட்டத்துக்கு புறம்பான வகையில் சட்டவிரோதிகளின் ஆட்சி வடக்கு கடலிலே நடக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியநான்கு மாவட்டங்களிலும் மீனவர்கள், மீனவக்குடும்பங்கள் அதிகமாக உள்ளனர்.

முன்பு இப்படி சட்டவிரோத தொழில்கள் இல்லை. மீனவச் சமூகத்தினர் மிகவும் செழிப்பாக இருந்தார்கள். இப்போது, மீனவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியே. முன்னைய ஆட்சியாளர்கள் சட்டவிரோதிகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தாத தால் இப்போது விரிவடைந்து கடல் முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டது"- என்றார். (எ)

# திடீரென முறிந்து வீழ்ந்த மரம் ஓட்டோ முழுமையாக சேதம்!

## மயிரிழையில் உயிர் தப்பிய பெண்



வவுனியா, பெப். 24

மரம் முறிந்து விழுந்ததில் ஓட்டோ முழுமையாக சேதமடைந்ததுடன் வயோதிபப் பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வவுனியா - மன்னார் வீதி, குருமன்காடு சந்திப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் முன்பாக ஓட்டோ ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் வயோதிபப் பெண் ஒருவரும் இருந்துள்ளார்.

இதன்போது, வீதியோரம் நின்ற மரம் திடீரென முறிந்து விழுந்தது.

மரம் முறிந்து விழுவதை அவதானித்த குறித்த பெண், ஓட்டோவிலிருந்து இறங்கி ஓடியதால் பாதிப்புக்கள் இன்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இதேவேளை, மரம் விழுந்ததால் ஓட்டோ முழுமையாக சேதமடைந்தது. (எ)

# கலை நிகழ்வும் மாருதம் சஞ்சிகை வெளியீடும்



வவுனியா, பெப்.24

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 28ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மாருதம் சஞ்சிகை வெளியீடும் நேற்று முன்தினம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

[illegible] அகளங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதோடு சாதனையாளர் கௌரவிப்பும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் கலந்து கொண்டார். அத்தோடு, மாருதம் சஞ்சிகையின் அட்டைப் படத்தை இம்முறை அலங்கரித்த யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் பேராசிரியர் சிறீ கணேசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ- 10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணல்காடு கடற்கரை தூய்மையாக்கப்பட்டது



வடமராட்சி, பெப். 24

கிளீன் சிறீ லங்கா வேலைத் திட்டத்தின் கீழ் மணற்காடு கடற்கரை பகுதி நேற்றைய தினம் தூய்மைப்படுத்தப் பட்டது.

வடமராட்சி கிழக்கு பிர தேச செயலர் சு. பிரபாகர மூர்த்தி தலைமையில் பருத்தித்துறை பிரதேச சபை, கிராம மக்கள், இராணுவம், கடற்படை இணைந்து மணற் காடு கடற் கரை தூய்மைப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சுமார் 600 வரையான அரச சேவையினர், பொதுமக்கள், இராணுவத் தினர் பங்கேற்றிருந்தனர். (ஐ-02)

# 32 இந்திய மீனவர்கள் மன்னார் கடலில் கைது

மன்னார், பெப். 24

மன்னார் வடக்கு கடற்பரப் பில் மீன்பிடியில் ஈடுபட்ட 32 இந்திய மீனவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று கடற் படை பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 5 மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட் டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கைதான மீனவர்கள் தலை மன்னாருக்கு அழைத்துச் செல் லப்பட்டனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

# புதிய அரசமைப்பு விடயத்தில் நாங்கள் கூட்டு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 24

**தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் எமக்கான தீர் வுத்திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. மாறாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டுநிலைப்பாட்டை எடுக்கவேண்டும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

புதிய அரசமைப்பு விடயத் தில் ஒன்றிணைந்து பயணிக்க தமிழ் அரசுக் கட்சிக்கு கஜேந் திரகுமார் பொன்னம்பலத்தின் அழைப்பு விடுத்திருந்தார். அவ ருக்கு பதிலளிக்கும் விதமாக சீ. வீ. கே. சிவஞானம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், "உரிய நேரம்வரும் போது புதிய அரசமைப்பு தொடர்பில் கலந்துரையாடு வோம்", என்று குறிப்பிட்டி ருந்தார்.

இது தொடர்பில், சிறீதரன் எம். பியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் எமக்கான தீர்வுத்திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. மாறாக நாமனைவரும் ஒன்றி ணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இப்போது நாங்கள் தான் பசியுடன் இருக் கிறோம்.

பசியுடன் இருப்பவர்கள் தானே என்ன தேவை என்று கேட்கமுடியும்? உணவை வைத்திருப்பவன், பசியுடன் இருப்பவனைப் பார்த்து உனக்கு என்ன உணவு வேண் டும் என்று கேட்கப்போவ தில்லை. எனவே, எம்முடைய பசிக்குரிய உணவு எதுவென் பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

சுமார் 80 வருடங்களாக தமிழர்களாகிய நாம் உரிமைப் பசியுடன் வாழ்கிறோம். அந்த உரிமைப் பசிக்காக நாம் செய்த தியாகங்கள் அளப்பரியவை. அதற்காக ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கிறோம். எனவே, எம்முடைய உரிமைப் போராட்டமும், தமிழர் அரசியலும் உரிமைக்காகப் போராடி மாண்ட உயிர்களின் மீதும், சாம்பல் மேட்டின் மீதும்தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இற்றைவரை உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழினத்தின் தேவை மற்றும் கோரிக்கை என்னவென் பதை நாங்கள்தான் வெளிப்ப டையாகக் கூறவேண்டும். மாறாக அரசாங்கம் கூறும் வரை நாங்கள் காத்திருக்க முடியாது.

இவ்விடயத்தில் நாம் (தமிழ் அரசுக் கட்சி) மாத்தி ரமன்றி, தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல கட்சிகளும் இணைந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண் டும் - என்றார். (ஐ)

# தமிழ் அரசுக் கட்சி தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

கொழும்பு, பெப். 24

புதிய அரசமைப்பு விடயம் குறித்து இலங்கை தமிழ் அரசுக் கட்சி எடுத்துள்ள தான் நிலைப் பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்தி ரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு தொடர் பில் கூட்டிணைந்த செயல்பாட் டுக்கு கஜேந்திரகுமார் பொன் னம்பலம் அழைப்பு விடுத்தி ருந்தார். இது தொடர்பாக, தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் அவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், உரிய காலம்வரும் போது கலந்துரையாடுவோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே, கஜேந்திரகுமார் பொன்னம்ப லம் தமிழ் அரசுக் கட்சி தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் கஜேந்திரகுமார் தெரிவித்தவை வருமாறு,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவராக சீ. வீ. கே. சிவஞானம் தெரிவுசெய் யப்பட்ட பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்து வெளியிட்ட அவர், புதிய அரசமைப்பு வரைவு குறித்த கூட்டுப்பேச்சில் பங்கேற்பதற்கு தமது கட்சிக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து, ஜனவரி 25ஆம் திகதி நானும், செல்வ ராஜா கஜேந்திரனும் அவரை நேரடியாக சந்தித்து, உத்தியோ கபூர்வ அழைப்புக் கடிதத்தை அவரிடம் கையளித்திருந்தோம். இந்நிலையில் அக்கடிதத்துக்குப் பதிலளித்து சீ. வீ. கே. சிவஞா னம் அனுப்பி வைத்த கடிதத்தில், புதிய அரசமைப்பு வரைவு குறித்து இன்னமும் அர சாங்கம் முன்மொழியாத நிலை யில், தாம் இப்போது அதுபற் றிப் பேசுவது பொருத்தமற்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 25ஆம் திகதி நான் அவரை நேரில் சந்தித்துப் பேசியபோது இவ்விடயத்தில் அவர் காண்பித்த ஆர்வத்துக் கும், இப்போது அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட் டிருக்கும் விடயத்துக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கட்சி ரீதியில் இடம்பெற்ற ஒரேயொரு மாற்றம் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக எம். ஏ. சுமந்திரன் தெரிவுசெய் யப்பட்டமை மாத்திரமேயா கும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அபிப்பிராயங்கள் மற்றும் நலன்களுக்கும் சுமந்தி ரனின் தனிப்பட்ட நலன்களுக் கும் இடையில் பெரும் வேறு பாடு உண்டு என்பது சகலரும் நன்கறிந்த விடயமாகும். ஏனெனில், 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்ப



குதியில் தயாரிக்கப்பட்ட ஏக்கிய இராச்சிய அரசியல மைப்பு வரைவு செயன்முறை யில் சுமந்திரனே முதன்மை வகித்தார்.

இருப்பினும் தமிழ் அரசுக் கட்சியில் மிகமுக்கிய நபராகக் காண்பிக்கப்பட்ட அவரை கடந்த பொதுத்தேர்தலில் தோற்கடித்ததன் மூலம் அவரால் தயாரிக்கப்பட்ட ஏக்கிய இராச்சிய அரசமைப்பு வரைவையும் தமிழ்மக்கள் நிராகரித்தனர். இவ்வாறான தொரு பின்னணியில் தற்போது சிவஞானத்தினால் அனுப் பிவைக்கப்பட்ட கடிதத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் தீர்மானங்களுக்கு சுமந்திரனின் தெரிவே காரணமாக இருக்கக் கூடும். அதுமாத்திரமன்றி பேச்சை தாமதப்படுத்துவதன் ஊடாக, அநுரகுமார திஸ நாயக்க அரசாங்கம் விரும் பும் ஏக்கிய இராச்சிய அரசியல மைப்பு வரைவை தமிழ்மக்கள் நிராகரிப்பதற்கான கால அவ காசத்தைக் குறைப்பதற்கு முற் படுகிறார்களா என்ற சந்தேக மும் எமக்கு உண்டு.

புதிய அரசமைப்பு வரைவு குறித்த கூட்டுப்பேச்சு தொடர் பில் மேற்கொள்ளப்பட்ட தீர் மானத்தை இலங்கைத் தமிழ் அர சுக் கட்சி மறுபரிசீலனை செய்து, வெகுவிரைவில் அதற்கு உடன் படவேண்டும் - என்றார். (ஐ)

# சிவாஜிலிங்கம் மருத்துவமனையில்!



வடமராட்சி, பெப். 24

தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன் னாள் பாராளுமன்ற உறுப்பின ருமான எம். கே. சிவாஜிலிங்கம் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கி ழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் திடீர் சுகயீனம் காரணமாக அவர் சேர்க்கப்பட்டார்.

உடல்நலக் குறைவால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சிவாஜிலிங்கம் கடந்த ஆண்டு இறுதியில் இந்தியாவிலும் கொழும்பிலும் சிகிச்சை பெற்றி ருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# மோசடியாகப் பணம் பெற்ற பெண் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், பெப். 24

வெளிநாட்டிலிருந்து யாழ்ப் பாணம் வந்தவர்களை இலக்கு வைத்து போலி மருத்துவ அறிக் கைகளை காண்பித்து பண மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான பெண்ணிடம் இருந்து அவர் மோசடியாக பெற்ற 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளான திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், கொக்குவில் பகுதிகளிலேயே குறித்த பெண் மோசடி செயல்களில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் பொலிஸ் நிலையமருகே வெளிநாட்டி லிருந்து வந்து தங்கியிருந் தவரின் வீடொன்றுக்கு சென்ற குறித்த பெண் தனக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வுள்ளதாகவும் அதற்கு பண உதவி தேவை என்றும் கூறி 50 ஆயிரம் ரூபாயை பெற்று சென்றுள்ளார்.

இந்த விடயம் குறித்து வெளிநாட்டிலிருந்து வந்தவர் தனது உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். இதன் போதே, குறித்த பெண் இவ்வாறு பலரிடம் மோசடி யாக பணம் பெற்றமையை உறவினர்கள் கூறியுள்ளனர். இதைத் தொடர்ந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

பொலிஸாரின் விசாரணை யில் வெள்ளிக்கிழமை இரவு குறித்த பெண் கைது செய்யப் பட்டார்.

கைதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த கோப் பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 வகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

### மருத்துவர்களின் தொழிற்சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

**நாட்டில் தற்போது அத்தியாவசிய மருந்துகள் உட்பட சுமார் 90 வகையான மருந்துகளுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

அரச மருத்துவமனைகளில் இன்சுலின்கள், குறைந்த அளவிலேயே கையிருப்பில் உள்ளன. மருத்துவ விநியோக பிரிவின் தகவலுக்கமைய விநியோகிப்பதற்கு முடியாத பல மருந்துகள் தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளன.

இதன்படி, கொலஸ்ட்ரோலுக்கான மருந்துகள் உள்ளிட்ட அவசியமான பல மருந்துகளுக்கு தட்டுபாடு நிலவுகிறது.

அரசாங்கத்தால் விநியோகஸ்தர்களுக்கு நாணய கடிதங்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் இவ்வாறு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனவே, குறித்த நிலையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் சுகாதார பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜயமுனியிடம் கேட்டபோது,

"இன்சுலின்களுக்கு பெரியளவில் தட்டுப்பாடு ஏற்படவில்லை. விநியோக பொறுப்பை ஏற்ற நிறுவனம் இன்சுலினை விநியோகிப்பதில் சிக்கல்களை ஏற்படுத்தி வருகிறது.

எனவே, மாற்று விநியோகஸ்தர்கள் தொடர்பில் ஆராயப்படுகிறது. அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படும் 60 மருந் துகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அரசாங்கங்ளுக்கு இடையில் ஒப்பந்தம் ஊடாக அவ்வாறான மருந்துகளை இறக்குமதி செய்ய எதிர்பார்த் துள்ளோம் - என்றார். (ஐ)

## நீதிமன்றுக்குள் துப்பாக்கிச் சூடு மேலும் 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, பெப். 24

புதுக்கடை நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி கணேமுல்லை சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது, கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் கம்பஹா மற்றும் உடுகம்பொல பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்தமை, கொலையாளிக்கு துப்பாக் கியை வழங்கிய குற்றங்களுக் காக கம்பஹாவை சேர்ந்த 22 வயதான தமிந்து லக்ஷான் என்பவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

மேலும், துப்பாக்கிச் சூடு நடத்தியவரையும் மற்றைய சந்தேக நபரையும் தப்பிச் செல்ல உதவியமைக்காக தமித் அஞ்சன நயனஜித் என்ற 25 வயதுடைய நபரும் உடுகம்பொல, அஸ்கிரியபொல பகுதியைச் சேர்ந்த 19 வயது சாமோத் கிம்ஹான் என்ற இளைஞரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

புதுக்கடை நீதிமன்றம் துப்பாக்கிச்சூடு:

## சூத்திரதாரி - துப்பாக்கிதாரியின் குறுந்தகவல், உரையாடல் வெளியானது!

கொழும்பு, பெப். 24

கடந்த 19ஆம் திகதி புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் பாதாள உலகத்தை சேர்ந்த கணேமுல்லை சஞ்சீவ என்பவர் உயிரிழந்தார். இதன்போது, இந்தக் கொலையை திட்டமிட்ட சலிந்த என்பவருக்கும் துப்பாக்கிதாரியான தில்ஷானுக்கும் இடையிலான வட்ஸ்அப் உரையாடல் வெளியாகியுள்ளது.

துப்பாக்கிதாரி - "உள்ளே ஏதாவது பிரச்னையா?", "நான் உள்ளே இருக்கிறேன்"சலிந்த - "இல்லை, நீ தயாராகு? முடித்து விடு "எல்லாம் சரியாக இருக்கிறது"துப்பாக்கிதாரி - "அப்படியானால் பொலிஸார்?"சலிந்த (காலை 9.48 மணிக்கு) "எல்லாம் நன்றாக இருக்கிறது -நீ முடித்து விடு"

காலை 9.54 மணிக்கு துப்பாக்கிதாரி சலிந்தவுக்கு அழைப்பு எடுத்துள்ளார்.

இதன்போது, சலிந்த "அவன் இறந்துவிட்டானா?" என்று கேட்டுள்ளார்."ஆமாம்" என்று துப்பாக்கிதாரி பதிலளித்துள்ளார்.அதற்கு சலிந்த, "அருமை - "நீ என் உயிர்" என்று கூறியுள்ளார்.

அதற்கு துப்பாக்கிதாரி - "ஏன் இப்படி கூறுகின்றீர்கள் - நீங்கள் எனக்கு உணவளித்து ஒரு தந்தையைப் போல என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். எனவே நீங்கள் என் சகோதரர்" - என்கிறார்."சகோதரி இன்னும் அங்கேயே தான் இருக்கிறாள் - நான் வந்துவிட்டேன்", என்றும் துப்பாக்கிதாரி கூறிள்ளார். (ஐ)

## மித்தெனிய துப்பாக்கிச்சூடு; மற்றொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, பெப். 24

மித்தெனிய துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை தங்காலை குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். கைதானவர், 29 வயது நபர் என்றும் அவர், தெலம்புயாய - வெகந்தாவலையை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அருண விதானகமகே என்பவரும் அவரின் இரு பிள்ளைகளும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இதுவரை ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பதுளை பேருந்தில் தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு, பெப். 24

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த பேருந்து ஒன்றிலிருந்து 123 தோட்டாக்களை பொலிஸார் கைப்பற்றினர்.

குறித்த பேருந்தை பண்டாரவளையில் மறித்து சோதனையிட்டபோது, அதிலிருந்த பயணப் பொதி ஒன்றிலிருந்து இந்த தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. அந்தப் பொதியில் இருந்த தோட்டாக்களில் 113 பிஸ்டல் ரக துப்பாக்கியினுடையவை என்றும் 9 ரி - 56 ரக துப்பாக்கிக்கு உரியவை எனவும் கண்டறியப்பட்டன.

## விசேட தேவையுடையோரின் உயர்கல்வியில் விசேட கவனம்!

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர் கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளி சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்புடைய குழுவினருடனான சந்திப்பிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசேட தேவையுடையவர்கள் பொது சமூகத்தில் இயல்பான வாழ்க்கையை முன்னெடுக்க தேவையான சமூக அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். கிளீன் சிறீ லங்கா திட்டத்தினூடாகவும் நாம் அதனை செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர் கல்வியை ஒரு தலைப்பாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம். அதற்கு தேவையானவர்களை நியமித்துள்ளோம்.

கல்வியில் பெரும் மாற்றத்துக்கு நாம் இப்போது தயாராகி



வருகிறோம்.

2025ஆம் ஆண்டு இது தொடர்பான கொள் கைகள் தயாரிக்கப்பட்டு, 2026 இல் இதை நடைமுறைப்ப டுத்தத் தொடங்குவோம்.

இது முழு முறைமையையும் மாற் றும் நீண்ட காலத் திட்டம். நிச்சயமாக, விசேட தேவைக ளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வி முறைக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

அனைத்து பாடசாலைகளிலும் விசேட தேவையுடைய பிள்ளைகள் வழமை போன்று கல்வியில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம்.ஆனால், இது ஒரு பெரிய செயன்முறை. படிப்படியாக அந்த இலக்குகளை அடை வோம் என்று நம்புகிறோம் - என்றார். (ஐ)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நிதி முறைகேடு

### விசாரணைக்கு கோப் உப குழு அமைப்பு

கொழும்பு, பெப். 24

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்கு கோப் உப குழு குழு ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை யூத் சேர்விஸ் (தனியார்) நிறுவனத்தின் 2022ஆம் ஆண்டு மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, தற்போதைய செயலாற்றுகை மற்றும் 2021 நவம்பர் 16ஆம் திகதி நடத்தப்பட்ட கோப் குழுவில் வழங்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி ஆராயும் நோக்கில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கூடியபோதே இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நிதி முறைகேடுகள் மற்றும் மோசடியான செயல்பாடுகள் பல வெளிப்பட்டன. அத்துடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்காக கோப் உபகுழுவொன்றை நியமிக்க குழுவின் தலைவர் தீர்மானித்தார்.

இதற்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாரச்சியின் தலைமையில் உறுப்பினர்களான சமன்மலி குணசிங்க, ஜகத் மனுவர்ண, சுனில் ராஜபக்ஷ, அசித நிரோஷன எகொட விதான மற்றும் (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோரைக் கொண்டதாக கோப் உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த உபகுழுவால் விசாரணைகள் நடத்தப்பட்டு அதன் அறிக்கை கோப் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

ஸ்மார்ட் யூத்' கண்காட்சி மற்றும் இசைநிகழ்ச்சிக்காக செலவிடப்பட்ட ரூ.18.8 கோடிக்கான காசோலை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் தலைவரால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

4 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்ச்சிகளுக்காக இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட தினத்தில் பி.ப 2 மணி முதல் பி.ப 5 மணி வரையான காலப் பகுதிக்குள் இந்தக் காசோலையை உறுதிப்படுத்தித் தருமாறு முன்னாள் தலைவர் தமக்கு அழுத் தம் கொடுத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கமைய முன்னாள் தலைவர் அழுத்தத் தைப் பிரயோகித்திருப்பது தெளி வாகப் புலப்படுவதாக குழு சுட்டிக்காட்டியது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோ - சீனா இணைவு மூலமாக இனப் பிரச்னைக்கு தீர்வு காணலாம்

## அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக

கொழும்பு, பெப். 24

**இந்தோ - சீன இணைவின் மூலமாக இலங்கையின் தேசிய இனப்பிரச்னைக்கு நடைமுறைச்சாத்தியமான ஆசியப் பிராந்திய முறைமையை கண்டறிய முடியும் என்று இராஜ தந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

சீனாவின் தேசிய இன விவகார ஆணையகத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பான் யூ தலைமையிலான குழுவினரின் வருகை மற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சமகால நிலைப்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சீனக் குழுவின் தலைவரான அமைச்சர் பான் யூ, சிறுபான்மையினரின் பாதுகாப்பு, இன நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான தலைப்புகளில் செயல்பட்டுள்ளார். ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான அமைச்சர் பான், சீனாவின் சிறுபான்மை விவகாரங்களை கையாள்வதையே முக்கிய பணியாகக் கொண்டுள்ளார். அத்துடன் சுற்றுச்சூழல் ஆர்வலரான அமைச்சர் பான் யூ, ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் காலத்தில் ஒரு சிந்தனை மிகு தலைவராக வளர்ந்து வரும் நட்சத்திரமாக உள்ளார்.

உயர்மட்ட சீனக்குழுவினரின் தற்போதைய வருகை இனப்பிரச்னையில் தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. கொண்டிருக்கின்ற குழப்பங்களை தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்புகளை கொண்டிருக்கின்றது. இனப் பிராந்திய சுயாட்சி என்பது இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு என்பதில் ஜே. வி. பி. உறுதியாக இல்லை. வளர்ச்சியின்மையின் பகிரப்பட்ட சமூகப் பொருளாதாரப் பிரச்னைகளைத் தவிர, அரசியல் பிராந்திய பரிமாணத்துடன் ஒரு தனித்துவமான இனச் சிறுபான்மையினரின் பிரச்னைகள் தொடர்பில் கரிசனைகள் இருக்கின்றனவா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

இதேநேரம், சுயாட்சிக்கான 30 ஆண்டுகால ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சமஷ்டி அடிப்படையிலான சுயாட்சியையும் தமிழ் தேசிய அரசியல் தரப்பினர் கோருகின்ற அதேநேரம், சிங்கள பெரும்பான்மை அரசியவாதிகள் ஒற்றையாட்சி முறைமையை கைவிடுவதற்கு தயாராக இல்லை. ஆகவே. இந்தியாவால் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தத்தை தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எதிர்ப்பதைப் போலவே சீனாவின் இன சுயாட்சி மாதிரியையும் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், இந்த எதிர்ப்பை மாற்றியமைத்துக்கொள்ள முடியும். குறிப்பாக இந்தியாவின் (அரை- கூட்டாட்சி) மற்றும் சீனாவின் (ஒற்றையாட்சி அல்லது சுயாட்சி) மாதிரிகள் வேறுபட்டிருந்தாலும், இந்தியாவின் 13ஆவது திருத்தம் மற்றும் சீனாவின் இனப் பிராந்திய சுயாட்சி ஆகியவைமுற்றிலும் இணக்கமானவை மற்றும் அவற்றை ஒன்றுடன் ஒன்று சேர்க்கலாம். ஆகவே, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, வருகை தந்துள்ள சீன அமைச்சரிடம், இலங்கையின் மாகாண சபை அமைப்பு குறித்த நிபுணர் கருத்தைப் பகிர்ந்து கொள்ளவும், பொருத்தமான நெறிப்படுத்தல் மற்றும் மேம்பாட்டை பரிந்துரைக்கவும் வேண்டும் - என்றார். (ஐ)

# 2 கைத்துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 24

இரு ரிவால்வர் ரக துப்பாக்கிகள், தோட்டக்கள், வாள்களுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி - ஹபராதுவை - வெல்லேகேவத்த பகுதியில் வீடொன்றில் வைத்தே சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் அதே இடத்தை சேர்ந்த 26 வயது நபராவார். சந்தேகநபரிடம் இருந்து, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவால்வர் ரக துப்பாக்கி ஒன்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவால்வர் ரக துப்பாக்கி ஒன்றும், 2பிஸ்டல் தோட்டாக்கள் மற்றும் 2 வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று ஹபராதுவை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஊடகவியலாளர் சமுதித்தவுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிப்பு

கொழும்பு, பெப். 24

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அவர் நேர்காணல் செய்த நால்வர் கொல்லப்பட்டமையை அடுத்து அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் 4 பொலிஸ் அதிகாரிகள் தனக்கு பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சமுதித்த சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

சமுதித்த சமரவிக்ரமவால் நேர்காணல் செய்யப்பட்ட நான்கு பேர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.அண்மையில் மித்தெனிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து சமுதித்த சமரவிக்ரம தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கமையவே அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேநேரம், கடும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் சமுதித்த சமரவிக்ரம போன்ற ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சம்பள திருத்தம் தொடர்பில் மருத்துவர்கள் அதிருப்தி!

கொழும்பு, பெப். 24

இலவச சுகாதார சேவையை வலுப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை வரவேற்றுள்ள நிலையில், 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள திருத்தங்கள் குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இந்த வரவு - செலவு திட்டத்தில் சுகாதாரத் துறைக்கு 60 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு 18 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மணிநேர கூடுதல் கடமை கொடுப்பனவு விகிதம் 50 வீதம் குறைக்கப்பட்டு, விடுமுறை கொடுப்பனவுகளும் குறைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தங்களால், மருத்துவ நிபுணர்களுக்கு நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளதால், அவர்கள் மனச்சோர்வடைந்துள்ளனர். இந்த பிரச்னையைத் தீர்க்க தவறினால், தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

இந்த சிக்கலை அரசாங்கம் விரைந்து தீர்க்கவேண்டும் என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# 10 ஆயிரம் சிகரெட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 24

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வெளியே 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 10 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்களுடன் அழகுக்கலை நிபுணர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டபோதே அவர் சட்டவிரோதமாக சிகரெட்களை கொண்டு வந்தமை தெரிய வந்தது.

இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் 27 வயதான கடவத்தையை சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டார். (ஐ)

# பாதாள உலகக் குழுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்!

## இலக்கு மாறாது என்கிறார் பாதுகாப்பு செயலர்



கொழும்பு, பெப். 24

நாட்டின் தேசிய பாதுகாப்பு வலுவாக உள்ளதோடு பாதாள உலகக் குழுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இலக்கில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.

அண்மைய நாட்களில் அதிகரித்துள்ள துப்பாக்கிப் பிரயோகங்கள் தொடர்பிலும், அதனால் நாட்டின் தேசிய பாதுகாப்பின் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள கடுமையான விமர்சனங்கள் மேலெழுந்துள்ளமை குறித்தும் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,புதுக்கடை நீதிமன்றத்தின் சாட்சிக் கூண்டில் நின்றவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் துரதிர்ஷ்டவசமானது.

நீதிமன்ற வளாகங் களில் சட்டத்தரணிகளை சோதனைக்கு உட்படுத்துவதில்லை என்பதை பயன்படுத்தி அச்சம்பவம் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவமானது, பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதலின் வெளிப்பாடாகும். அதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படவில்லை என்பதை குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை வைத்துத்தான் நாட்டின் தேசிய பாதுகாப்பை மதிப்பீடு செய்ய முடியும். அந்த வகையில் நாட்டின் தேசிய பாதுகாப்பு வலுவாகவே உள்ளது.

மேலும், நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை ஒருசில மணிநேரத்துக்குள்ளேயே நாம் கைது செய்துள்ளோம். இதுவொரு முக்கிய மாற்றமாகும். அதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்தோடு நாம் பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்துகின்ற இலக்கிலிருந்து வெளியேறவில்லை.

நாட்டில் சட்டம் ஒழுங்கு பின்பற்றப் பட்டு அமைதியான நிலைமை நீடிக்க வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கமாகும்.

இதேவேளை, சட்டவிரோத சம்பவங்களுடன் தொடர்புடைய படைத்தரப்பினர் மற்றும் பொலிஸார் தொடர்பிலும் உயர்மட்டத்தில் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

# அடர் காட்டிலிருந்து 12 வயது சிறுவன் மீட்பு

கொழும்பு, பெப். 24

அடர்ந்த காட்டுப் பகுதியில் 12 வயது சிறுவன் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாந்தோட்டை - பூந்தல தேசிய வனப்பகுதிக்குள் உள்ள ஊறனிய பிரதேசம் அருகிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இந்த சிறுவனை வனஜீவராசிகள் அதிகாரிகள் மீட்டனர்.

கண்டுபிடிக்கப்பட்ட சிறுவன் வனஜீவராசிகள் அதிகாரிகளால் அம்பாந்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும், அவர் எவ்வாறு அந்தக் காட்டுப் பகுதிக்கு வந்தார் என்ற கேள்விக்கு பதில் தெரியவில்லை.

சிறுவன் பெலியத்தை பகுதியை சேர்ந்தவராவார். சிறுவன் தனது கிராமத்தில் இருந்து சுமார் 70 கிலோமீற்றர் தூரத்தில் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரியை முன்னிட்டு கிழக்கில் தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை!

திருகோணமலை, பெப்.24

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் மகா சிவராத்திரி தினத்துக்கு மறுநாள் அதாவது எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர அறிவித்துள்ளார்.

இதற்கான பதில் பாடசாலையானது மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் வழமை போல நடைபெறுமெனவும் தெரிவித்துள்ளார். (எ)

# கல்முனை பொலிஸ் நிலைய அணிவகுப்பு, பரிசோதனை



கல்முனை, பெப்.24

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்சீன் பக்கீர் தலைமையில் நேற்று முன்தினம் கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச். ஜி. டி. எஸ். அமரசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் நடைபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

மேலும், பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள்,

சுற்றுச் சூழல், பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் பொலிஸ் உப பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ- 01)

# பாடசாலை மைதானத்தில் வைத்து ஐவர் கொண்ட குழு வாள்வெட்டு!

### இருவர் படுகாயத்துடன் மருத்துவமனையில்

மட்டக்களப்பு, பெப்.24

மட்டக்களப்பு, ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்த 5 பேர் கொண்ட குழு ஒன்று அங்கு விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 20 ஆம் திகதி மாலை 06.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில், படுகாயமடைந்தவர்கள் மட்டு. போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வருடத்துக்கு முன்னர் கோவில் ஒன்றில் காயமடைந்தவர்களுக்கும் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திய குழுவுக்கும் இடையே இடம்பெற்ற மோதலுக்குப் பழிவாங்கும் நோக்கத்தில் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்தால் பிரதேச மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதுடன் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களை கைது செய்ய உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# துப்பாக்கியுடன் திருக்கோவிலில் ஒருவர் சிக்கினார்

திருக்கோவில், பெப்.24


அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கமன்கந்த பிரதேசத்தில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் திருக்கோவில் முகாம் அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கோமாரி பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சாரதியின் உறக்கத்தால் தலைகீழாக கவிழ்ந்த வான்

### மூவர் மருத்துவமனையில்



கல்முனை, பெப்.24

அம்பாறை - மஹியங்கனை வீதியில் வெலிகும்புர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த வான் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வானின் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தின் போது வானின் சாரதி உட்பட மூவர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# மாகாண உதைபந்தாட்ட போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி வெற்றி



திருகோணமலை, பெப்.24

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்கு உட்பட்ட மாகாண மட்ட இறுதிப் போட்டி கடந்த 21 ஆம் திகதி திருகோணமலை, கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி அணியுடன் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில், 5 - 0 என்ற கோல் கணக்கில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ஆகிப் என்ற மாணவன் 3 கோல்களும், ஷயான், ஆமிர் தலா ஒரு கோல் அடித்து தமது அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.(எ)

# பற் சுகாதாரம் பரிசோதிப்பு

சம்மாந்துறை, பெப்.24

முன்பள்ளி சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கமாக சம்மாந்துறை அல் - வாஸித் முன்பள்ளியில் நேற்று முன்தினம் பிள்ளைகளின் பற் சுகாதாரம் பரிசோதிக்கப்பட்டதுடன் பல் துலக்கும் பொறிமுறையும் மேற்கொள்ளப்பட்டது. (எ-01)

# திருமலையில் நெல் அறுவடை விழா



திருகோணமலை, பெப்.24

திருகோணமலை, சேருநுவர கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள அல் - ஹூதா விவசாய சம்மேளனப் பிரிவில் இம்முறை 280 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற் செய்கையின் அறுவடை விழா கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது.

இதனை அல் - ஹூதா விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.இதன்போது, விருந்தினர் கள் மற்றும் விவசாயிகளால் நெல் அறுவடை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.அத்துடன் நெல் அறுவடை சிறந்து விளங்க விசேட பிரார்த்தனை நிகழ்வு களும் நடைபெற் றன.

இந்த நிகழ்வில் சேருநுவர கமநல சேவை நிலையத்தின் பொறுப்பதிகாரியும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம். நௌபர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விதிப்பு மிரட்டலுக்கு பிறகு பிரிக்ஸ் நாடுகள் பிரிந்துவிட்டன

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சொல்கிறார்

வாஷிங்டன், பெப்.24

**வரி விதிப்பு மிரட்டலுக்கு பிறகு பிரிக்ஸ் நாடுகள் பிரிந்துவிட்டன என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். பிரிக்ஸ் நாணயத் திட்டம் மோசமான நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது என்றும், இதுபற்றி இப்போது பேசவே பயப்படுகிறார்கள் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.**

ட்ரம்பின் அதிரடி பொருளாதார நடவடிக்கைகளால் உலக நாடுகள் கலக்கத்தில் உள்ளன. அவரது நடவடிக்கை வர்த்தகப் போர் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகளாவிய வர்த்தக பரிவர்த்தனையில் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்க டொலருக்கு மாற்றாக பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள நாடுகள் புதிய நாணயத்தை உருவாக்க ஆலோசனை மேற்கொண்டன. ஆனால், டொலரை விட்டு வெளியேற முயற்சிக்கும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் கடந்த வாரம் மிரட்டல் விடுத்திருந்தார்.


இதனையடுத்து பிரிக்ஸ் அமைப்பு தனது புதிய நாணயத்திட்டம் தொடர்பில் எந்தவொரு புதிய தகவலையும் வெளியிடவில்லை.

இந்த நிலையில், வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பிரிக்ஸ் அமைப்பின் முயற்சி தொடர்பில் ட்ரம்ப் கூறுகையில், "பிரிக்ஸ் நாடுகள் எங்களின் டொலரின் மதிப்பை குறைத்து அழிக்க முயற்சி செய்தன. அவர்கள் ஒரு புதிய நாணயத்தை உருவாக்க விரும்பினார்கள்.

அதனால் நான் ஆட்சிக்கு வந்ததும் முதலில் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டேன். டொலரை அழிக்க முயற்சிக்கும் எந்தவொரு பிரிக்ஸ் நாட்டுக்கும் 150 சதவீத வரி விதிக்கப்படும், உங்கள் நாடுகளின் பொருட்கள் எங்களுக்கு வேண்டாம் என்று கூறினேன். இப்போது பிரிக்ஸ் நாடுகள் பிரிந்துவிட்டன.

அவர்களுக்கு என்ன நடந்தது என எனக்குத் தெரியவில்லை. சமீப காலமாக பிரிக்ஸ் நாடுகளிடமிருந்து எந்தவொரு தகவலும் வரவில்லை. இது அற்புதமான திருப்பம்"- என்றார். (எ)

# இஸ்ரேல் பணய கைதிகள் மேலும் இருவர் விடுதலை



காஸா, பெப்.24

இஸ்ரேலிய பணயக் கைதிகளில் மேலும் 2 பேரை ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்துள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசமுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுதலை செய்து வருகிறது. இதற்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்து வருகிறது.

இந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் இஸ்ரேலிய பணயக் கைதிகளில் மேலும் 2 பேரை ஹமாஸ் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது. இதற்கு ஈடாக 602 பலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுதலை செய்கிறது. (எ)

# மியன்மாரில் மோசடியில் சிக்கிய சீனர்களை மீட்க தனி விமானம்!



பீஜிங், பெப்.24

மியன்மாரில் மோசடி மையங்கள் மீதான நடவடிக்கைக்குப் பிறகு நூற்றுக்கணக்கான சீனர்கள் தனி விமானம் மூலம் வீடு திரும்பவுள்ளனர்.

தாய்லாந்து - மியன்மார் எல்லையில் சர்வதேச மோசடி கும்பலால் பல மையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் பணிபுரிய பெரும்பாலும் வெளிநாடுகளில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் குறிவைக்கப்படுகின்றனர். நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை என நம்பி அவர்களும் அங்கு செல்கின்றனர்.

இந்த நிலையில், மியன்மாரில் பணிபுரிந்த 1,000இற்கும் மேற்பட்ட சீனத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு தாய்லாந்து கொண்டு வரப்பட்டனர். இதனையடுத்து அவர்களை மீட்பதற்காக சீனா தனி விமானங்களை தாய்லாந்துக்கு அனுப்பியுள்ளது. இந்த நடவடிக்கைக்குப் பின்னர் அவர்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பவுள்ளனர்.

இதேவேளை, மியன்மார் இராணுவ அரசாங்கத்துடன் இணைந்த ஒரு குழுவான கரேன் எல்லைக் காவல் படை, எதிர்வரும் நாட்களில் மியன்மார் - தாய்லாந்து எல்லைப் பகுதியிலிருந்து மேலும் 10, 000 பேரை நாடு கடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது. (எ)

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு மூவர் உயிரிழப்பு


வாஷிங்டன், பெப்.24

அமெரிக்காவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்தனர்.

கெண்டகி மாகாணம் லூயிஸ்வெலி பகுதியில் சாரதி அனுமதிப்பத்திர பதிவு அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்தின் வாகனம் நிறுத்தும் இடம் அருகே சிலர் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த நபர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 2 பெண்கள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வழக்குப்பதிவு செய்த பொலிஸார், துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# மெக்சிக்கோவில் கரையொதுங்கிய அரியவகை மீனால் மக்கள் அச்சம்!



மெக்சிக்கோ சிற்றி, பெப்.24

மெக்சிக்கோ கடற்கரையில் கரையொதுங்கிய டூம்ஸ்டே மீனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடலின் அடிப்பகுதியில் சுமார் ஆயிரம் அடி ஆழத்தில் வசிக்கக் கூடிய டூம்ஸ்டே மீன் ஒன்று மெக்சிக்கோ கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது. இது வழக்கமான மீன்களைப் போல இன்றி நீளமான உடல் வாகு மற்றும் மிளிரும் தன்மை கொண்ட மீனாகும்.

இந்த மீன் திடீரென கடலோரத்தில் கரையொதுங்கிருப்பது அபாயமிக்க ஒன்றாக சொல்லப்படுகிறது. ஏனெனில் பேரழிவு நெருங்கும்போது மட்டுமே இந்த மீன்கள் ஆழ்கடல் பகுதியை விட்டு வெளியே வரும் என புராணக்கதைகள் கூறுவதாகப் பலரும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜப்பான் கடற்கரையில் 20 இற்கும் மேற்பட்ட டூம்ஸ்டே மீன்கள் கரையொதுங்கின. அதே ஆண்டு ஜப்பானில் மிகப் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ஜப்பான் வரலாற்றில் மிக மோசமான பேரழிவை ஏற்படுத்தியது. (எ)

# பாகிஸ்தான் சிறையிலிருந்து 22 இந்திய மீனவர் விடுதலை

இஸ்லாமாபாத், பெப்.24

பாகிஸ்தான் சிறையிலிருந்து 22 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கடல் எல்லையை தாண்டி சட்ட விரோதமாக பாகிஸ்தானின் கடற்பரப்பில் மீன் பிடித்ததாக மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த மாதம் முதலாம் திகதி இரு நாடுகளுக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட கைதிகளின் பட்டியல்களின்படி, பாகிஸ்தானில் மொத்தம் 266 இந்தியக் கைதிகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் 49 சிவில் கைதிகள் மற்றும் 217 மீனவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தண்டனை காலம் முடிந்த 22 இந்திய மீனவர்களை நேற்று முன்தினம் கராச்சி மாலிர் சிறையிலிருந்து அதிகாரிகள் விடுவித்துள்ளதாகவும், அவர்கள் இன்று இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# பணய கைதியின் உடலுக்கு பதில் வேறு உடலை ஒப்படைத்த ஹமாஸ்

## இஸ்ரேல் கடும் எச்சரிக்கை

டெல்அவிவ், பெப்.24

இஸ்ரேலிய பணயக் கைதியின் உடலுக்கு பதில் வேறு உடலை ஹமாஸ் அமைப்பு ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

பணயக் கைதிகளில் கொல்லப்பட்ட 4 இஸ்ரேலியர்களின் உடலை ஒப்படைக்க ஹமாஸ் ஒப்புக்கொண்டது. உடல்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இஸ்ரேலிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில், 4 பேரின் உடல்களையும் பிரேத பரிசோதனை செய்த இஸ்ரேல், ஒடெட் லிப்ஷி, குழந்தைகள் ஏரியல் பிபஸ், கிபிர் பிபஸ் ஆகியோரின் உடல்களை உறுதி செய் தன. ஆனால், 4ஆவது உடல் ஷிரி பிபசின் உடல் இல்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. டி.என்.ஏ. உட்பட அனைத்து வகையான ஆய்வுகளுக்குப் பின் 4ஆவது உடல் ஷிரி பிபசின் உடல் இல்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும், அந்த உடல் பணயக் கைதிகள் யாருடைய டி.என்.ஏ. உடனும் சேரவில்லை எனத் தெரிவித்துள்ளது.

பணயக் கைதியின் உடலுக்குப் பதில் வேறு உடலை ஹமாஸ் ஒப்படைத்துள்ளதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும், கொல்லப்பட்ட பணயக் கைதியின் உடலை ஒப்படைக்காமல் ஹமாஸ் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், இந்தச் செயலுக்கு ஹமாஸ் அமைப்பு மிகப்பெரிய விலை கொடுக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## தசுன் ஷானக்கவுக்கு ரூ. 29 இலட்சம் அபராதம்

கொழும்பு, பெப்.24

சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துடன் செய்து கொண்ட வீரர்களுக்கான ஒப்பந்த விதிமுறைகளை மீறியதற்காக தசுன் ஷானக்கவுக்கு சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனம் 29 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

தற்போது நடைபெற்றுவரும் பிரதான கழக மூன்று நாள் போட்டி ஒன்றில் தனது உள்நாட்டுக் கழகத்துக்காக விளையாடிய ஷானக்க, காயம் காரணமாக போட்டி முடிவடைவதற்கு முன்னரே விலகியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஷானக்கவை ஓய்வு எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் ஒன்றை வீரர் சமர்ப்பித்த பின்னர், அவர் போட்டியின் எஞ்சிய பகுதியில் தொடர்ந்து பங்கேற்கவில்லை.

எவ்வாறாயினும் அன்றைய தினமே மாலையில் அவர் டுபாய்க்கு சென்று அங்கு தொழில் முறை போட்டியில் பங்கேற்றுள்ளார்.

அவரது இந்தச் செயலானது, வீரர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய தொழில்முறை, நேர்மை, சிறீலங்கா கிரிக்கெட்டுக்கான அர்ப்பணிப்பை நிலைநிறுத்த வேண்டிய ஒப்பந்த விதிகள் பலவற்றை மீறுவதாகக் கருதப்பட்டது.

விசாரணையின் போது, ஷானக்க தனது செயல்பாடுகளை ஒப்புக்கொண்டதுடன் இதனால் ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அதற்கு தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

மேலும், தான் நேர்மையற்ற நோக்கத்துடன் செயல்படவில்லை என்றும், எதிர்காலத்தில் சிறந்த சிந்தையுடன் செயல்படுவதாகவும் சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்கு உறுதி வழங்கினார் என்று சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




## கட்டார் ஓபின் ரென்னிஸ்: ரூப்லெவ் சம்பியன்

டோஹறா, பெப்.24

கட்டார் ஓபின் ரென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் ஆந்த்ரே ரூப்லெவ் சம்பியனானார். இந்தத் தொடர் டோஹறாவில் நடைபெற்று வந்தது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில் 10ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் ஆந்த்ரே ரூப்லெவ், தரவரிசை யில் 16ஆவது இடம் வகிக்கும் இங்கிலாந்தின் ஜாக் டிராபெருடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆந்த்ரே ரூப்லெவ், 7-5, 5-7, 6-1 என்ற செட் கணக்கில் ஜாக் டிராபெரை வீழ்த்தி 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார். (எ)



## 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி



கராச்சி, பெப்.24

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில் கராச்சியில் நடைபெற்ற 3ஆவது லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 315 ஓட்டங்கள் குவித்தது.

இதில் பவுமா 58 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ரிக்கல்டன் சதம் அடித்த நிலையில் 103 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதேவேளை, வென் டர் டுசென் அரைச்சதம் அடித்த நிலையில் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஆப்கானிஸ்தான் தரப்பில் முகமது நபி 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.இதையடுத்து 316 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கி யது.


தொடக்கம் முதலே தென்னாபிரிக்க அணியினரின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தது.

.இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 43. 3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 208 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

அந்த அணியின் சார்பில் அதிகபட்ச மாக ரகமது ஷா 90 ஓட்டங்கள் எடுத்தார். தென்னா பிரிக்க அணி சார்பில் அதிகபட்சமாக ரபாடா 3 விக் கெட்களும், நிகிடி மற்றும் முல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதன்மூலம் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது. (எ)

## அரையிறுதியில் ரைபகினா தோல்வி



டுபாய், பெப்.24

டுபாய் சர்வதேச ரென்னிஸ் தொடர் அரையிறுதி போட்டியில் ரைபகினா அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார்.

இந்த ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தான் முன்னணி வீராங்கனையான எலெனா ரைபகினா, ரஷ்யாவின் மிர்ரா அண்ட்ரீவாவுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

இதில் முதல் 2 செட்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில், 3ஆவது செட்டை மிர்ரா ஆண்ட்ரீவா கைப்பற்றி ரைபகினாவுக்கு அதிர்ச்சி கொடுத்தார். ரைபகினா இந்த ஆட்டத்தில் 4 -6, 6 - 4 மற்றும் 6 - 3 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். (எ)

## “இந்தியா வெற்றி பெறும்”

மும்பை, பெப்.24

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியை இந்தியா வீழ்த்தும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், “இந்திய அணியில் 1 முதல் 5 வரை 5 சுப்மன் கில்கள் உள்ளனர். அதாவது அந்த இடத்தில் விளையாடும் நமது அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் சதம் அடித்து வெற்றி பெற்றுக் கொடுக்கக் கூடியவர்கள்.

அக்சர் பட்டேல் 5ஆவது இடத்தில் விளையாடினால் நீங்கள் இந்திய அணியில் இருக்கும் திறமையின் ஆழத்தை கற்பனை செய்து பாருங்கள்.பாகிஸ்தானுக்கு எதிராக மட்டும் இந்தியா வெற்றி பெறக்கூடிய அணியாக இல்லை. இத்தொடர் முழுவதையும் அவர்கள் வெல்லும் அணியாக இருக்கிறார்கள்.

எனவே, இந்தப் போட்டியில் வெற்றி பெறுவது பாகிஸ்தானுக்கு எளிதாக இருக்காது. டுபாயில் வெற்றி பெறுவதற்கு சுழற்பந்து வீச்சாளர்கள் தேவை. அங்குள்ள ஆடுகளத்தில் பந்து கொஞ்சம் திரும்பும் என்று எனக்கு தெரியும். ஆனால் பாகிஸ்தான் வீரர்கள் சுழலை நன்றாக எதிர்கொள்ள மாட்டார்கள். இந்தியாவிடம் தரமான சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர்”- என்றார். (எ)

## 4 விக்கெட்களால் மும்பை வெற்றி!



பெங்களூரு, பெப்.24

நடப்பு சம்பியனை வீழ்த்தி மும்பை அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

3ஆவது மகளிர் பிரீமியர் லீக் ரி - 20 கிரிக்கெட் போட்டி லீக் ஆட்டங்கள் இந்தியாவின் பெங்களூரு வில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 7ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பி யன் மும்பை இந்தியன்ஸ் அணி, நடப்பு சம்பியன் பெங் களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணியை எதிர்கொண்டது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழந்து 167 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

தொடர்ந்து 168 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி விளையாடிய மும்பை அணி 19. 5 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 170 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் ஹர்மன்ப்ரீத் கவுர் 50 ஓட்டங்கள் எடுத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி...

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என். சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. ரவீந்திரா (வேந்தன்), தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சட்டத்தரணி வி. மணிவண்ணன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் சபாகுகதாஸ், ஜனநாயக தமிழ் அரசு கட்சி சார்பில் க. நாவலன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மற்றும் சமத்துவ கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மனித...

இருந்து விலகும் முடிவை கட்சியின் கொள்கைகளுக்கு அமைய எடுத்துள்ளார். இது இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமானதாக இருக்கும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இலங்கையில் நடந்த போர் குற்றங்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்ற பொறிமுறையை அமெரிக்கா பரிந்துரைத்த நிலையில், கடந்த 15 ஆண்டுகளாக நீதி கோரி போராடி வரும் தமிழினத்துக்கு பின்னடைவாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

எனினும், பூகோளவாத போட்டியில் இலங்கையின் நிலைப்பாடே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்று கருதப்படுகின்றது. (ஐ)

## ஏப்ரல்...

என்பது அர்த்தமில்லை. உள்ளூராட்சி தேர்தலை எப்போது நடத்தலாம் என்பதை முன்னதாகக் கூடி தீர்மானிக்கலாம்", என்றார்.

மேலும், "தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து எதிர்க்கட்சிகள் மற்றும் ஆளும் கட்சி இடையே பரிந்துரைகள் உள்ளன. இருப்பினும், உள்ளூராட்சி சட்டத்தின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு தனது முடிவுகளை எடுக்கிறது. வரவு - செலவு திட்டம் அல்லது வேறு எந்த வெளிப்புற விடயங்களும் எங்கள் முடிவுகளை பாதிக்கவோ அல்லது குறுக்கிடவோ இல்லை.

"எங்களை சந்தித்த எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்ட விவாதம் நிறைவடையும்வரை வேட்பு மனு திகதியை அறிவிக்க வேண்டாம் என்று கேட்டனர். ஆளும் கட்சி முற்கூட்டியே அறிவிக்குமாறு வலியுறுத்தியது. நாம் அனைத்து பரிந்துரைகளையும் கருத்தில் கொள்வோம். எனினும் சட்டப்படியே செயல்படுவோம்"- என்றார். (ஐ)

## மகன்...

கடந்த 19ஆம் திகதி மாலை வத்திராயன் பகுதிக்கு வாகனம் ஒன்றில் வவுனியாவிலிருந்து வந்த குழுவினர் வீடு ஒன்றுக்குள் புகுந்து இரும்புக் கம்பிகள், கொட்டன்கள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தினர். இதில் நால்வர் காயமடைந்தனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த நபரே குடும்பப் பிரச்னை காரணமாக தனது தந்தை, சகோதரன் மற்றும் சகோதரனின் மனைவி, மகன் ஆகியோர்மீது அடியாட்களை ஏவி தாக்குதலை நடத்தினார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், தாக்குதலில் காயமடைந்தவர்கள் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இந்த நிலையில், உயிரிழந்த நபர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இந்தச் ம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-02-05)

## 50 கி.மீ...

தினம் கடற்கரைப் பகுதிகள் சிரமதானம் மூலம் தூய்மைப்படுத் தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் 15 பிரதேச செயலர் பிரிவு களிலும் அந்தந்த பிரதேச செயலர்கள் தலைமையில் கடற்கரையோர பகுதிகள் சிரமதானம் மூலம் சுத்தமாக்கப்பட்டன.

பிரதான நிகழ்வு யாழ். மாவட்ட செயலர் தலைமையில் சக்கோட்டை கடற்கரை பகுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், பொலிஸார், முப்படையினர் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ-02-05)

## மூன்றாம் கட்ட...

2022ஆம் ஆண்டு நாடு முகங்கொடுக்கநேர்ந்த தீவிர பொருளாதார நெருக்கடியை அடுத்து, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல்திட்டத்தின்கீழ் 290 கோடி டொலர் கடனை இலங்கைக்கு வழங்குவதற்கான முன்மொழிவுக்கு 2023 மார்ச் 20ஆம் திகதி நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்தது.

இதற்கமைய முதல்கட்டமாக 33 கோடி டொலர் நிதி இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதன் நீட்சியாக முன்னெடுக்கப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட மீளாய்வுகளை அடுத்து இரண்டாம், மூன்றாம் கட்ட கடன் நிதியும் விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைந்த பின்னர் நாட்டுக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளால் கடந்த ஆண்டு நவம்பர் 17 - 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல் திட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மீளாய்வை அடுத்து சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டபோதிலும், 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் இந்த நிதிவசதி செயல்திட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு அமைதல், கடன் மறுசீரமைப்பில் முன்னேற்றம் எட்டப்படல் உள்ளிட்ட மிகமுக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்ட இந்த இணக்கப்பாட்டுக்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் அளிக்கும் என சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதியும், நிதியமைச்சருமான அநுரகுமார திஸநாயக்கவால் கடந்த திங்கட்கிழமை 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல்திட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சபையால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதுகுறித்து அண்மையில் கருத்து வெளியிட்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொஸாக், கடந்த நவம்பர் மாதம் எட்டப்பட்ட பணியாளர் மட்ட இணக்கப்பாட்டுக்கு நாணய நிதிய இயக்குநர் சபையின் அனுமதி பெறப்படவேண்டும். இருப்பினும், விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல் திட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு ஏற்புடைய விதத்தில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் - என்று கூறியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

# இலங்கை - இந்திய சமுதாய பேரவையினர் சந்திப்பு!



கொழும்பு, பெப். 24

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம், இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கை - இந்திய சமுதாய பேரவை ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# ஐ.நா. கடல் காப்பு சட்டத்தில் இலங்கையும் இணைந்தது!

கொழும்பு, பெப். 24

ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபையின் தேசிய அதிகார வரம்புக்கு அப்பால் பட்ட கடல் உயிரியல் பன்முகதன்மையை பாதுகாத்தல் மற்றும் நிலையான பயன்பாடு குறித்த கடல்வள பாதுகாப்பு சட்டத்தில் இலங்கையும் இணைந்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி சர்வ தேச அரசாங்கங்களுக்கு இடையே நடை பெற்ற கடல் பல்லுயிர் பெருக்கம் குறித்த விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த சட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் கடல்வள பாதுகாப்பு சட்டம் தொடர்பான மாநாட்டின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் இலங்கை 109ஆவது நாடாக தற்சமயம் ஒப்பமிட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து, ஒப்பந்தத்தின் விதிமுறைகள் உரிய முறையில் செயல்படுவதை மேற்பார்வையிடுவதற்காக இலங்கை அரசாங்கம் விசேட குழு ஒன்றை நிறுவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுச் சட்ட கட்டமைப்பை உருவாக்க, சர்வதேச ஒத்துழைப்புடன் சட்ட வரைவை இந்த குழு ஒன்றிணைத்து செயல்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தில் இணைவதன் மூலம் கடல்சார் பாதுகாப்பின், மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் சர்வதேச நாடுகளின் விசேட அறிவை பெற முடியும். தவிர, நாட்டின் கடல் சார்ந்த நிர்வாகத்தை உறுதி செய்ய முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிவனொளிபாதமலை வனத்தில் தீ பரவல்!

நுவரெலியா, பெப். 24

சிவனொளிபாத மலை தொடர் வனப் பகுதியில் நேற்றைய தினம் தீ பரவியதால் சுமார் 3 ஏக்கர் காட்டுப் பகுதி அழிவடைந்தது.

லக்ஷபான தோட்ட எமில்டன் பகுதியில் இந்தத் தீ ஏற்பட்டதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

வெப்பமான வானிலையால் தீயை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொது...

செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்த முயற்சிப்பதாகக் கூறப்படுவது தொடர்பான தகவல்களை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர் - என்றார்.

அத்துடன், உள்ளூராட்சித் தேர்தலை மிகவிரைவாக நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தேர்தலை நடத்தத் தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான திகதியை மிகவிரைவில் அறிவிக்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## இலங்கை...

சூரிய மின் உற்பத்தி நிலைய நிர்மாண பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன், முன்னதாக இரு நாடுகளும் எட்டிய கூட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் குறித்தும் ஆராய்வார்.

மேலும், இந்தப் பயணத்தின்போது நரேந்திரமோடி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரை சந்தித்து உரையாடுவார். இதேநேரம், தமிழ் அரசியல் கட்சியினரையும் இந்திய பிரதமர் கொழும்பில் சந்திப்பார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## விஜித ஹேரத்...

இலங்கைக்கு எதிரான போர் குற்றச்சாட்டுகள் குறித்த விசேட அறிக்கையொன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக வெளிவிவ கார அமைச்சு தகவல்கள் குறிப்பிட் டுள்ளன.

இறுதிக்கட்ட போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் அறிக்கை சமர்ப் பிக்கப்பட உள்ளதாகவும் அரசாங் கத்தின் நிலைப்பாட்டை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் சொல்வதாக இந்த அறிக்கை அமையுமெனவும் வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## பி.பி.சி....

தயாரிப்பாளராக வும் இருந்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேர்கண்டதன் மூலம் மிகப் பிரபலமாகியிருந்தார். அத்துடன், அவர் பிரபாகரனுடனும் மிகுந்த நட்பு பாராட்டியிருந்தார்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியை சொந்த இடமாகக் கொண்ட ஆனந்தி, 1970களில் லண்டனுக்கு புலம்பெயர்ந்திருந்தார். அத்துடன், சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் 2006ஆம் ஆண்டுக்கான தலைவராகவும் செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# எதிர்க்கட்சி எம். பிக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, பெப். 24



எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு மீளாய்வின் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், "தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கம் மீது அண்மை காலமாக குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

எதிர்க்கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் போதுமானளவு பாதுகாப்பை வழங்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா சபாநாயகரிடம் எழுத்துமூலம் கோரியுள்ளார்.

எவ்வாறாயினும், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வாறான பாதுகாப்பு வழங்கப்படாது என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார். (ஐ)

# எமக்கு பிரச்னை தந்தால் பரவாயில்லை மக்களின் பிரச்னைகளைத் தீருங்கள்!

நாமல் ராஜபக்ஷ எம். பி. சொல்கிறார்



கொழும்பு, பெப். 24

**எங்களுக்கு என்ன பிரச்னை வந்தாலும் பரவாயில்லை. மக்களுடைய பிரச்னைகளுக்குத் தீர்வுகளை பெற்றுத் தாருங்கள் என்றே நாங்கள் அரசாங்கத்தை கேட்கிறோம் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.**

கொழும்பிலுள்ள ஒலபொதுவ விகாரையில் வழிபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எங்களுக்குப் பிரச்னை கொடுத்தால் பரவாயில்லை. மக்களை பிரச்னையில் தள்ளிவிடாமல் இருந்தால் சரி. இப்போது அரசியல்வாதிகளுக்கும் பிரச்னைகளை ஏற்படுத்தி விடுகிறார்கள். மக்களையும் பிரச்னைகளில் தள்ளிவிடுகிறார்கள்.

எந்த சந்தர்ப்பத்திலும் மக்களை பிரச்னையில் தள்ளிவிடக்கூடாது.

எங்களுக்கு என்ன பிரச்னை வந்தாலும் பரவாயில்லை. மக்களுடைய பிரச்னைகளுக்குத் தீர்வுகளை பெற்றுத் தாருங்கள் என நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம்." - என்றார். (ஐ)

மட்டு. போதனா மருத்துவமனையில்

# குழந்தையை பிரசவித்து யன்னல் வழியாக வீசியெறிந்த மாணவி!

மட்டக்களப்பு, பெப். 24

மாணவி ஒருவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் மலசலகூடத்தில் குழந்தையை பிரசவித்து அதனை யன்னல் வழியாக வீசியுள்ளார். எனினும், அதிர்ஷ்டவசமாக அந்த சிசு உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைபெற் இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

18 வயதுடைய மாணவி ஒருவர் தான்நிறைமாத கர்ப்பவதி என்பதை மறைத்து வயிற்று வலி எனத் தெரிவித்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மருத்துவமனையில் சேர்ந்துள்ளார்.

இதனை நம்பிய மருத்துவர் மாணவிக்கு வயிற்றுவலிக்கான வலி நிவாரணியை ஊசி மூலம் செலுத்தியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, அதிகாலை 5 மணியளவில் மருத்துவமனையின் மலசலகூடத்துக்கு சென்ற மாணவி அங்கு குழந்தையை பிரசவித்துள்ளார். பின்னர், அதனை யன்னல் ஊடாக வீசியுள்ளார். அந்தக் குழந்தை மேல் தளத்தில் விழுந்துள்ளது.

இந்த நிலையில், குழந்தையின் அழுகுரல் சத்தத்தை கேட்டு அங்கிருந்த தாதியர்கள் குழந்தையை காப்பாற்றியுள்ளனர்.

இதன் பின்னர், தாய்க்கும் சிசுவுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது. சிகிச்சையின் பின்னர் இருவரும் நலமாக இருக்கின்றனர் என்று மருத்துவமனை பணிப்பாளர் திருமதி கலாரஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருத்துவமனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் உயர்வு!

கொழும்பு, பெப். 24

பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

பிரதானமாக சித்திரவதை, தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல், துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்று அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையகத்தில் நடந்த உயர் கூட்டமொன்றில் பேசப்பபட்டது.

இதில், புதிய பொலிஸ் நிர்வாகத்தின் கீழ், திறன் மேம்பாடு, நிறுவன மறுசீரமைப்பு, புதிய நுட்பங்கள் மற்றும் பொறிமுறை ஊடாக இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவின் வகிபாகம், குறிப்பாக சித்திரவதை மற்றும் வலிந்து காணாமல் ஆக்குதல் போன்ற செயல்பாடுகளுடன் தொடர்புடைய சட்ட அமுலாக்க அதிகாரிகளை விசாரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழக்கு தொடருதல் மற்றும் தண்டனைகள் குறைவாக இருப்பது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை தெரிவித்துள்ளது. (ஐ)

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை!

பழனி திகாம்பரம் எம். பி. சாடல்

நுவரெலியா, பெப். 24

மலையக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்னும் உரிய நடடிக்கை எடுக்கவில்லை என்று பழனி திகாம்பரம் எம். பி. கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் தொழிலாளர் தேசிய முன்னணி முக்கியஸ்தர்கள் நேற்று கூடி ஆராய்ந்தனர். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நாம் தயாராகி வருகின்றோம். இது சம்பந்தமாக தோட்டத் தலைவர்கள் உட்பட கட்சி பிரமுகர்களுடன் கலந்துரையாடினோம். தற்போதைய அரசாங்கம் வாய்வீச்சு அரசாங்கமாகவே உள்ளது. செயலில் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

மலையக மக்கள் கடந்த முறையும் தேசிய மக்கள் சக்திக்கு 50 ஆயிரம் வரையான வாக்குகளையே வழங்கினார். மலையகத்திலுள்ள கட்சிகளுக்குதான் கடந்தமுறையும் வாக்குகளை வழங்கினார்கள்.

மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்கப்படும் என்றார்கள், எதிரணியில் இருக்கும்போது மலையக மக்கள் தொடர்பில் அதிகம் கதைத்தார்கள். தற்போது அதிகாரத்தில் இருக்கும்போது தீர்வை முன்வைக்காமல் உள்ளனர்.

வரவு - செலவு திட்டத்தில்கூட மலையகத்தக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியில்கூட இந்திய நிதியே பெருமளவு உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுகூட கைகூடுமா என தெரியவில்லை. எனவே, தோட்டத்தொழிலாளர்களை சிறு தோட்ட உரிமையாளராக்குவதன் மூலமே இந்த சம்பள பிரச்னைக்கு நிரந்தர தீர்வை காணமுடியும்." - என்றார். (ஐ)

# பாராளுமன்ற குழுக்களில் எதிர்க்கட்சி பிரதிநிதிகளை அதிகரிக்க தீர்மானம்!

கொழும்பு, பெப். 24

பாராளுமன்ற குழுக்களில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் முடிவு நேர்மறையான முறையில் பரிசீலிக்கப்பட்டு உடனடியாகத் தெரிவிக்கப்படும் என்று சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டார் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற குழுக்களில் எதிர்க்கட்சியின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பாக எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாட கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, உறுப்பினர்களின் இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக சபாநாயகர் கடந்த 19 ஆம் திகதி சபையில் வெளியிட்ட அறிவிப்பு குறித்து, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சபை முதல்வர் எழுத்துபூர்வமாக சபாநாயகருக்கு தெரியப்படுத்தினார். (ஐ)

# சட்டவிரோதமாக சிகரெட்களை விற்பனை செய்த இருவர் கைது!

கொழும்பு, பெப். 24

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனைகளில் சட்டவிரோத சிகரெட்களை விற்பனை செய்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - மருதானை - மகிந்த மாவத்தை பகுதியில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 2 இலட்சத்து 20 ஆயிரம் சிகரெட்களை வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவராவார்.

இதேவேளை, குருநாகல் பேருந்து நிலையத்துக்கு அருகில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 200 சிகரெட்களை வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் குருநாகலை சேர்ந்த 61 வயதுடையவராவார். (ஐ)

# யானைகள் சரணாலயம் மூலம் 18.6 கோடி ரூபாய் வருமானம்!

கொழும்பு, பெப். 24

பின்னவல யானைகள் சரணாலயத்திலிருந்து கடந்த ஆண்டு 18.3 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக சரணலாயத்தின் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த ஆண்டு ஜனவரியில் ரூ. 12.29 கோடி ரூபாயும் கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி நிலவரப்படி ரூ. 6 கோடி ரூபாய்க்கும் அதிகமான வருவாயையும் ஈட்ட முடிந்துள்ளது. இதன்படி, ஆண்டின் முதல் 50 நாட்களில் ரூ.18. 3 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்று சரணாலயத்தின் பிரதி பணிப்பாளர் மிஹிரான் மெதவல தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஆண்டு 38 ஆயிரத்து 239 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் 35 ஆயிரத்து 26 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர். அத்துடன், சுற்றுலா பயணிகளின் வருகையும் வேகமாக அதிகரித்து வருகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 24.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org